

கடலூர் கிழக்கு மாவட்ட கழக மகளிர்அணி, மகளிர் தொண்டரணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மேயர் சுந்தரி ராஜா, சக்திவேல், சுதா சம்பத்,அமுதராணி ஹெலன்டேவிட்சன்,நாமக்கல் பா.பரணி, குமரி விஜயகுமார்,தமிழரசி ரவிக்குமார், ரேகா பிரியதர்ஷினி, ஆ.மங்கையர்கன்னி, ரத்னா லோகேஸ்வரன் கலந்துகொண்டனர். மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ப.மனோரஞ்சிதம் நன்றியுரையாற்றினார்.



வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி ஒடுக்கத்தூர் பேரூராட்சியில் திராவிட பொங்கல் விழா முன்னிட்டு மாபெரும் மாரத்தான் போட்டி நடைபெற்றது. இதில் வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, கொடி அசைத்து மாரத்தான் போட்டி தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.பிரகாஷ், பேரூராட்சி செயலாளர் ஆர்.பெருமாள் ராஜா, ஒன்றிய துணை செயலாளர் கணபதி, பேரூராட்சி தலைவர், துணை தலைவர், வார்டு கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நர்வாகிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் உடன் இருந்தனர்.

# ஏகலைவா பள்ளிகளில் ஆசிரியர், ஆசிரியரல்லாத பணிகளுக்கான தேர்வில் தமிழ் புறக்கணிக்கப்பட்டது ஏன்?

## திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜன. 12 –

அகில இந்திய அளவில் நடைபெறும் ஏகலைவா பள்ளிகளில், ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணிகளுக்கான தேர்வு எழுதுவதில், தமிழ்ப் புறக்கணிக் கப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. ஹிந்தி, ஆங்கிலத்தில் மட்டுமே தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எழுத முடியும் என்ற நிலையை ஏற்கவே முடியாது. தமிழ் புறக்கணிப்பை, ஹிந்தித் திணிப்பை தமிழ்நாடு பொறுத்துக் கொள்ளாது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



ஏகலைவா பள்ளிகள் என்ற பெயரில் இந்தியா முழுவதும் உள்ள மலைவாழ் மாணவர்களுக்கென ஒன்றிய அரசு நடத்தும் ஏகலைவா மாடல் ரெசிடென்சியல் ஸ்கூல் (EMRS) – பள்ளிகள் தமிழ்நாட்டில் விழுப்புரம், சேலம், ஊட்டி, திருவண்ணா மலை, வேலூர், நாமக்கல், காஞ்சிபுரம் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் சி.பி.எஸ்.இ பாடத் திட்டத்தில் செயல்படுகின்றன.

**தமிழ்நாட்டில் ஏகலைவா பள்ளி... தமிழுக்கு இடமில்லை!**

கடந்த 19.09.2025 இல் மேல்நிலைப்பள்ளி மற்றும் இடைநிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணிகளுக்கான அறிவிப்பு வெளியான நிலையில், அதற்கான தேர்வுகள் 13.12.2025, 14.12.2025 ஆகிய தேதிகளில் நடைபெற்றன. தேர்வில் பகுதி6 இல் மொழிகளுக்கான பகுதியில் ஆங்கிலம், அசாமி, வங்காளம், போடோ, டோகிரி, கரோ, குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், காஷ்மீரி, காசி, மலையாளம், மணிப்பூரி, மராத்தி, மிசோ, நேபாளி, ஒடிசா, சந்தலி, தெலுங்கு, உருது உள்ளிட்ட மொழிகள் இடம்பெற்றன.

உள்ளூர் மொழிகள் காலிப் பணியிடங்களின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டதாக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டு, தமிழ்நாட்டு மாணவர்கள் அனைவரும் மொழிப் பட்டியலில், தமிழ் இல்லாத காரணத்தால் பகுதி6 இல் ஆங்கிலத்தையே தேர்ந்தெடுத்து எழுத வேண்டிய இக்கட்டான சூழல் அமைந்தது. பகுதி 6இன் 30 மதிப்பெண்களுக்கு 12 தகுதி மதிப்பெண்கள் எடுக்க வேண்டிய சூழலில், 10 கேள்விகளுக்குக் கட்டாயம் ஹிந்தியிலும், 10 கேள்விகளுக்குக் கட்டாயம் ஆங்கிலத்திலும் பதில் அளிக்க வேண்டும். அடுத்து உள்ள உள்ளூர் மொழி என்னும் பிரிவுக்கான 10 மதிப்பெண்களுக்கு என குறிக்கப்பட்டுள்ள மொழிகளில் தமிழ் இல்லாத காரணத்தால், அப்பிரிவிற்கும் ஆங்கிலத்தையே தேர்வு செய்து எழுத வேண்டிய கடுமையான நிலை தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மட்டும் நேர்ந்துள்ளது.

**40% மதிப்பெண்கள் கட்டாயமாம்!**

அனைத்திந்தியத் தேர்வுகள் எதிலும், இந்தியக் குடிமக்களாகப் பங்கேற்றுப் பணியில் தேர்வடைய எல்லோருக்கும் உரிமை உண்டு தமிழர்களுக்கும் உண்டு. ஆனால், கட்டாயம் 40% மதிப்பெண்கள் எடுத்தால் தான், பிற கேள்விகளே திருத்தப்படும் என்று சொல்லப்படக் கூடிய கட்டாயமான மொழிப் பிரிவில் தமிழ் ஏன் இடம்பெறவில்லை?

தமிழ்நாட்டில் ஏகலைவா பள்ளிகள் இருக்கின்றன. அதில் பணியாற்ற மாட்டார்களா? அது குறித்த விவரம் என்ன? கடந்த சில ஆண்டுகளாகத் தமிழுக்கான ஆசிரியர்களே ஒன்றிய அரசின் கேந்திரிய வித்தியாலயா பள்ளிகளில் நிரப்பப்படவில்லை என்பது ஒன்றிய அரசின் வாயிலாகவே வெளிப்பட்டதே! அதே போல, ஏகலைவா பள்ளிகளில் உள்ள நிலைமை என்ன? எத்தனை இடங்கள் உள்ளன? அவற்றில் இட ஒதுக்கீட்டின் நிலை எவ்வாறு இருக்கிறது? தமிழ்நாட்டுப் பள்ளிகளில் நிரப்பப்படாத பணியிடங்கள் எவ்வளவு? போன்ற கேள்விகள் எழுகின்றன.

இவற்றுக்கு உரிய பதில்களை ஒன்றிய அரசு தரவேண்டாமா?

தேர்வில் உள்ளூர் மொழிகளில் தமிழ் புறக்கணிக்கப்பட்டதன் மூலம் தமிழ்நாட்டு மாணவர்களுக்கான வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளதே! இது அநீதி அல்லவா?

**ஒரே ஆண்டில் இரு காசி தமிழ்ச் சங்கமத்தின் பின்னணி!**

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள தேர்தலையொட்டி தங்கள் பிரச்சாரத்திற்காக, காசித் தமிழ்ச் சங்கமம் என்ற பெயரில் ”சங்கிமத்தைத் ஒரே ஆண்டில் இரண்டு முறை நடத்திய ஒன்றிய அரசு, தமிழைப் போற்றுவதாக வேடம் போடும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அரசு, தமிழுக்குத் தர வேண்டிய உரிமையை மறுப்பதேன்?

“தமிழுக்காகப் பேசுகிறோம், தமிழுக்காக உருகுகிறோம்” என்றெல்லாம் நாடகமாடும் ஒன்றிய ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அரசின் இரட்டை வேடத்திற்கு இதைவிட வேறென்ன சாட்சி வேண்டும்?

தமிழுக்கு உரிய நிதியையும் ஒதுக்காமல், தமிழர்களுக்கு உரிய வேலை வாய்ப்பையும் பறிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக் கொண்டு, ஆர்.எஸ்.எஸ். போடும் இந்த இரட்டை வேடத்தை தமிழர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்.

ஏகலைவா பள்ளிப் பணிகளுக்கான தேர்வுகளில் தமிழ் இணைக்கப்பட்டு, மீண்டும் தேர்வு நடத்தப்பட வேண்டும். இந்த அநீதிக்குரிய பரிகாரம் வழங்கப்படவேண்டும். இல்லையேல், தமிழ்நாடெங்கும் கிளர்ச்சியைத் தொடங்க வேண்டி இருக்கும். நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்து குரல் எழுப்பிட வேண்டும்.

தமிழ் புறக்கணிப்பை, ஹிந்தித் திணிப்பை எந்த நிலையிலும் தமிழ்நாடு பொறுத்துக் கொள்ளாது. நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல் களத்திலும் இப்பிரச்சினை நிச்சயம் எதிரொலிக்கும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில்

# “உங்க கனவ சொல்லுங்க” திட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

அரியலூர், ஜன.12-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசின் வரலாற்று சிறப்பு மிக்க முன்னெடுப்பாக உங்க கனவ சொல்லுங்க என்ற திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியின் காணொளிக் காட்சி நேரலை அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் ஒளிபரப்பு செய்யப் பட்ட நிகழ்வில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டார்.

அதனைத்தொடர்ந்து உங்க கனவ சொல்லுங்க திட்டத்தில் பணிகளை மேற்கொள்ளவுள்ள தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் விண்ணப்ப படிவங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி,கலந்து கொண்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும்,

அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்துகொள்ளும் உங்க கனவ சொல்லுங்க என்ற திட்டத்தினை இன்றையதினம் தொடங்கி வைத்துள்ளார்கள்.

அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி அனிதா அரங்கத்தில் இந்நிகழ்ச்சியின் காணொளிக் காட்சி நேரலை ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்கள் பயன்பெற்ற திட்டங்கள் மற்றும் கனவுகளை தன்னார்வலர்களை ஈடுபடுத்தி கண்டறிய எடுக்கப்படும் முன்மாதிரி முயற்சியாகும். பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துகளை பதிவு செய்ய தனியாக கைப்பேசி செயலி இதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் இப்பணிகளை மேற்கொள்ளவுள்ள தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டைகள், விண்ணப்ப படிவங்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சு.தேன்ராஜ்,

அரியலூர் நகர்மன்றத்தலைவர் சாந்தி கலைவாணன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் பிரேமி, மாவட்ட நிலை அலுவலர்கள், இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# எங்க கனவ சொல்லுறோம்!



**வா**ய் நிறையும் புன்னகை

வயிறு நிறையும் காலை உணவு

அறிவு நிறையும் நூலகங்கள்

கல்வி நிறையும் புதுமைப் பெண்

வாழ்க்கை நிறையும்
உரிமைத் தொகை

சந்தோஷம் நிறையும் விடியல் பயணம்

வெற்றி நிறையும்
நான் முதல்வன்

ஆரோக்யம் நிறையும் கலைஞர்
நூற்றாண்டு மருத்துவமனை

மனசு நிறையும் கோயில்கள்

இத்தனையும் தருகின்ற

திராவிட மாடல் முதல்வர் ஆட்சிதான்
மீண்டும் வேண்டும்

எப்போதும் வேண்டும்

இன்னும் பல

நூறாண்டுக்கும்
வேண்டும்!

**கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி**



அகஸ்தீஸ்வரம் வடக்கு - தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக

# திராவிட பொங்கல் கபடி விளையாட்டு போட்டி!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார்!

கன்னியாகுமரி, ஜன. 12 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பாக திராவிட பொங்கல் விளையாட்டு போட்டியாக கபடி போட்டியானது கொட்டாராம் மைதானத்தில் ஒன்றிய செயலாளர்கள் பாபு, மதியழகன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கபடி போட்டியினை துவக்கி வைத்து சிறப்பித்தார்.

உடன் பேரூர் செயலாளர்கள் இளங்கோ, முத்து பேரூராட்சி துணை தலைவர் விமலாமதி, பேருராட்சி முன்னாள் தலைவர் யோபு சார்பு அணி நிர்வாகிகள் பொன் ஜான்சன், தமிழன் ஜானி, தாமரைபிரதாப், அன்பழகன், நிசார், சுந்தரம், சுந்தர்சிங், ஐயப்பன், திரவியராமன், பாலசுப்ரமணியம், தேவகி, சந்திரகலா,

ஆல்வின்பிரபு, இளங்கோ, சுனில், காந்திராஜன், மணி, கழக நிர்வாகிகள் தமிழ்மாறன், பிரேம் ஆனந்த், அகஸ்தியலிங்கம் ஆன்டனி, கலைவாசகன், மதி, சுப்பையா மற்றும் விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தருமபுரியில் ‘உங்க கனவு சொல்லுங்க’ நிகழ்ச்சி!

தருமபுரி, ஜன. 12 –

தருமபுரி அரசு கலைக்கல்லூரி கலையரங்கத்தில் ”உங்க கனவ சொல்லுங்க ” திட்ட துவக்க விழா நிகழ்ச்சி காணொலி காட்சி வாயிலாக ஒளிபரப்பபட்டது.

இந்நிகழ்வில் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு, இத்திட்டத்தில் பங்கேற்றுள்ள தன்னார்வலர்களுக்கு தொப்பி மற்றும் கைபேசி இணைப்புகளைவழங்கினர்.

உடன்தருமபுரிநகரமன்றதலைவர் லட்சுமி மாது, மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,வருவாய் கோட்டாட்சியர்காயத்ரி,நகர செயலாளர் எம்.பி.கௌதம் மற்றும் மகளிர்சுய உதவி குழுவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு, தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பாக திராவிட பொங்கல் விளையாட்டு போட்டியாக கபடி போட்டியானது கொட்டாராம் மைதானத்தில் ஒன்றிய செயலாளர்கள் பாபு, மதியழகன் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கபடி போட்டியினை துவக்கி வைத்து சிறப்பித்தார். உடன் இளங்கோ, முத்து, விமலாமதி, யோபு, பொன் ஜான்சன், தமிழன் ஜானி, தாமரைபிரதாப், அன்பழகன், நிசார், சுந்தரம், சுந்தர்சிங், ஐயப்பன், திரவியராமன், பாலசுப்ரமணியம், தேவகி, சந்திரகலா, ஆல்வின்பிரபு, இளங்கோ, சுனில், காந்திராஜன், மணி, தமிழ்மாறன், பிரேம்ஆனந்த், அகஸ்தியலிங்கம் ஆன்டனி, கலைவாசகன், மதி, சுப்பையா மற்றும் விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு புதூர் பகுதி கழகச் செயலாளர் என்.எம். புண்ணியமூர்த்தி ஏற்பாட்டில் தமுக்கம் மைதானத்தில் சிலம்பாட்டம்,ஓட்டப்பந்தயம், மிதிவண்டி போட்டி, கோகோ ஆகிய விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட கழக செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் வி.வேலுச்சாமி (கழக தணிக்கை குழு உறுப்பினர்), பெ.குழந்தை வேலு (உயர்நிலை செயல் திட்ட உறுப்பினர்), அக்ரி கணேசன் (தீர்மான குழு செயலாளர்), மா. ஒச்சு பாலு (அவைத்தலைவர்). மாவட்ட நிர்வாகிகள் மூவேந்திரன், ராகவன், குரும்பன், சரவணன்,பொன்சேதுஇராமலிங்கம், முத்து கணேசன், ஆறுமுகம். வட்ட செயலாளர்கள் வி.சி.மாதவன், வேலு, மகேந்திரன். இளைஞர் அணி சௌந்தரராஜன் , கேசவன்,காளீஸ்வரன். நிர்வாகிகள் இளங்கோ, நரேந்திரன்,ராஜா, தீபக், சேக் அப்துல்லா, ஆழ்வார், ஆனந்த் மற்றும் நிர்வாகிகள் பெண்கள் அமைப்பு கலந்து கொண்டனர்.